டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்-ஐ ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 372 ஊராட்சி ஒன்றியங்களில் இப்போது 300 ஊராட்சி பகுதிகளில் துணை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு துணை ஆய்வாளர் இருப்பது என்பதுதான் கொள்கை என்று இருந்தால் இப்போது உள்ள நிதி நெருக்கடி காரணமாக இன்னும் 72 துணை ஆய்வாளர்கள் போடுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. சரகங்களைப் பொறுத்தவரையில் 24 சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் இருக்கின்றன. 372-க்கு இப்போது 300 சரகங்கள் இருக்கின்றன. இன்னும் 72 சரகங்கள் ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. 47 துணை ஆய்வாளர்களை நியமிக்கவேண்டுமென்று நிதித் துறையினர் ஒரு வரைவு அனுப்பி இருக்கிறார்கள். இதிலே 20 துணை ஆய்வாளர்களை நியமிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. படிப்படியாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு சரகம் என்ற நிலைமை ஏற்பட்டு ஒரு சரகத்திற்கு ஒரு துணை ஆய்வாளர் அமையும்படியான நிலைமை நாளடைவில் ஏற்படும்.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, இம்மாதிரி ஏற்படுத்துகின்ற வரையில் 'கேர்' பொருளை எடுத்துச் செல்வதற்கு ஆசிரியர்களுக்கு டி.ஏ. அனுமதிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப்பற்றித் தனியாக எழுதியனுப்பினால் பரிசீலிக்கலாம்.

ஆசிரியர்களுக்கு படிகள் வழங்கல்

*232 **வினா.—திரு. எம். பூபதி :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.ஜி.ஓ.-க்களுக்கு கொடுக்கப்படும் நகர ஈட்டுப் படிக்கும் தனியார் துறைப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் நகர ஈட்டுப்படிக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

(இ) அவ்விரு பிரிவினர்களுக்கும் நகர ஈட்டுப்படி எந்த எந்த தேதிகளிலிருந்து அமல் நடத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) வேறுபாடு எதுவும் இல்லை.

(இ) (1) சென்னை மாநகரத்திலுள்ள அரசாங்க ஆசிரியர்களுக்கு 1967-ம் ஆண்டு அக்டோபர் முதல்.

(2) சென்னை மாநகர எல்லையை அடுத்துள்ள பரங்கிமலை, பல்லாவரம், தாம்பரம், சித்தனப்பாக்கம், ஆவடி, அம்பத்தூர்,

1969 செப்டம்பர் 12]

மாதவரம், வில்லிவாக்கம், திருவொற்றியூர், குரோம்பேட்டைப் பகுதிகளிலும், மதுரை நகராட்சிப் பள்ளிகளிலும், உள்ள அரசாங்க ஆசிரியர்களுக்கு—1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாள் முதல்.

(3) சென்னை மாநகரத்திலும், சென்னை மாநகர எல்லைகளை அடுத்துள்ள பகுதிகளிலும், மதுரை நகராட்சிப் பகுதிகளிலும் உள்ள உள்ளாட்சி மன்றப் பள்ளிகள், மானியம் பெறும் பள்ளிகள் இவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு--1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாள் முதல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், நகர ஈட்டுப் படி, சம்பள விகிதம், ஓய்வு வயது, ஊதியக் குழு ஆகியவை சம்பந்தமாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை அண்மையில் சந்தித்தார்களா? அவர்களுடைய கோரிக்கைகள்மீது அரசு என்ன முடிவு எடுத்தது? ஏழு கோரிக்கைகள் அடங்கிய சுமார் ஒரு லட்சம் அஞ்சல் அட்டைகள் முதல் அமைச்சர் அவர்களுக்கு அண்மையில் அனுப்பப்பட்டதன் மேல் அரசாங்கம் எடுத்த முடிவு என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் அதற்கும் தொடர்பு இல்லை என்றாலும் விடை அளிக்கின்றேன். அவர்கள் கோரிக்கைகள் தந்திருக்கிறார்கள். நகர ஈட்டுப் படியைப் பொறுத்தவரையிலும் ஏற்கனவே கொடுக்கப் பட்டிருக்கிறது. மற்றப் பல பிரச்சினைகள் பரிசீலனையில் இருக்கின்றன. பரிசீலனை முடிந்து, முடிவு எடுக்கப்பட்டவுடன் அதுபற்றி அறிவிக்கப்படும்.

திரு. ஆலடி அருணா : சென்னை மாநகரத்தை அடுத்துள்ள நகரப் புறப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு நகர ஈட்டுப் படி கொடுப்பதைப்போல, மதுரை நகரத்தை அடுத்துள்ள நகரப் புறப் பகுதிகளில் இருப்பவர்களுக்கும் நகர ஈட்டுப் படி கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்னை மாநகரத்திலும், சென்னை மாநகர எல்லைகளை அடுத்துள்ள பகுதி களிலும் மதுரை நகராட்சிப் பகுதிகளிலும் உள்ள உள்ளாட்சி மன்றப் பள்ளிகள், மானியம் பெறும் பள்ளிகள் இவற்றில் பணி யாற்றும் ஆசிரியர்களுக்கு இப்பொழுது நகர ஈட்டுப்படி தரப் படுகிறது என்று விடை அளித்தேன். கனம் உறுப்பினர் கேட்டிருப்பது, தனியாகக் கவனிக்கப்பட வேண்டிய கேள்வி.

திரு. கே. போஜன் : சர்க்கார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை என்று கூறப்படுகிறதே, அதை நிவர்த்திக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சர்க்கார் பள்ளிகளில் பணி புரிகின்ற ஆசிரியர்களையும், தனியார் பள்ளிகளில் பணி புரிகின்ற ஆசிரியர்களையும் எவ்வெவ்வகையில் ஒத்த அளவில் கொண்டுவர முடியுமோ, அந்த அளவில் கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் பள்ளிகளில் இருக்கிறவர்கள் பெற முடியாத சலுகைகள் சிலவற்றைத் தனியார் பள்ளிகளில் இருக்கிறவர்கள் பெறக்கூடிய நிலையும் இருக்கிறது. சர்க்கார் பள்ளிகளில் இருக்கிறவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றப்படக்கூடிய அவதிக்கு உள்ளாகிறார்கள். அந்த நிலை தனியார் பள்ளிகளில் இருப்பவர்களுக்கு இல்லை. ஓரிடத்தில் வேலைக்கு அமர்ந்தால் தொடர்ந்து முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகள் அதே இடத்தில் இருக்கக்கூடிய வழிகள் இருக்கின்றன. ட்ரிபிள் பெனிஃபிட் என்ற முறையிலே தனியார் பள்ளிகளில் இருப்பவர்கள் அடைந்து வருகிறார்கள். தனியார் பள்ளிகளில் இருக்கின்றவர்களுக்கும், சர்க்கார் பள்ளிகளில் இருக்கின்றவர்களுக்கும் இடையே அதிக வேறுபாடு இல்லாத அளவுக்குச் செய்யும் முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது.

* 233 வினா.—**திரு. கே. போஜன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் மாநில ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட குளிர்காலப்படி (**Winder Allowance**) அங்குள்ள சர்க்கார் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால்; அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ). அரசினர் உயர்நிலைப்பள்ளி ஊழியர்களுக்குக் குளிர்காலப்படி வழங்கப்படுகிறது. ஆனால் அரசினர் (வாரிய) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குக் குளிர்காலப்படி கொடுக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, குளிர்காலப்படி, கோத்தகிரியில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் கூனூரில் உள்ள நகர மன்ற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும்தான் கொடுக்கப்படுகின்றது. கடந்த மாதம் நமது முதலமைச்சர் அவர்கள் கூனூருக்கு வந்திருந்தபோது, நீலகிரி ஆசிரியர்கள் சங்கம், ஏனைய பள்ளி ஆசிரியர்களுக்கும் குளிர் காலப்படி கொடுக்கவேண்டும் என்று அவரிடம் மனுக் கொடுத்தார்கள். அது உடனடியாகப் பரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி, அரசினர் உயர்நிலைப்பள்ளி ஊழியர்களுக்குக் குளிர்காலப்படி இப்பொழுது வழங்கப்படுகிறது.